ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் பகுதி 156, 157, 158 ஆகிய வட்டங்களில் மாவட்டக் கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுடன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ரவி, குமரன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி 54 வது வட்ட தமிழக வெற்றி கழக செயலாளர் ஆர்.ஆகாஷ், துணைச் செயலாளர் எஸ்.சுபம், பொருளாளர் ஸ்ரீமன் ராஜ் மற்றும் ஜே.பவித்ரன், ஏ.எஸ்.சஞ்சய், கே.தமிழ், எம்.எஸ்.பரணி, எஸ்.சுவாமிநாதன், பி.சிவமணி. பகுதி இளைஞரணி அமைப்பாளர் என்.சரவணன் மற்றும் எஸ்.பவானி, எம்.பானு, எம்.நிர்மலா ஆகியோர் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் 54வது வட்டச் செயலாளர் எம்.ஜெய்சங்கர், எஸ்.செந்தாமரை கண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை வெற்றிபெறச் செய்வீர்!

அனைத்து தொழிற்சங்கங்கள் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.9

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் 23 அன்று நடைபெற இருக்கிறது. இந்த தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கவும், இக்கூட்டணியை வெற்றிபெறச் செய்யவும் தமிழ்நாட்டின் அனைத்து தொழிற் சங்கங்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அனைத்து தொழிற் சங்கங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மூன்றாவது முறையாக ஒன்றிய அரசை ஆர்எஸ்எஸ் பிஜேபி கைப்பற்றியதற்கு பின்பு, இந்தியாவை தனது ஒற்றைப் பரிமாண இந்துத்துவ சர்வாதிகாரத்தின் கீழ் கொண்டுவரும் இலக்கை நோக்கி வேகமாக நடைபோடுகிறது.

அரசியல் அமைப்பு சட்டம் வகுத்தளித்த மாநிலங்களின் ஒன்றியம் என்ற கூட்டாட்சி முறைமையை சீர்குலைக்க அனைத்து வகையான முயற்சிகளையும் எடுத்து வருகிறது. தமிழ்நாட்டின் மீது வன்மம் கொண்டு, நமது பெருமைக்குரிய மாநிலத்தைச் சுற்றி பாசிச சதி வலை பின்னி வருகிறது. இதனை எதிர்த்து தமிழ் நாடு அரசு உறுதியாக போராடி வருகிறது.

ஒவ்வொரு மாநிலமாக, அது பல்வேறு தகிடுதத்தங்களை செய்து விழுங்கி வருகிறது. மாநிலங்களுக்கு எந்த உரிமையும் இல்லை, அதிகாரங்கள் அனைத்தும் மையத்தில் மட்டுமே குவிக்கப்படும் ஆபத்து பெருகி வருகிறது.

இந்தியாவில் பொருளாதாரத்தில் முதன்மை பங்கு வகிக்கிற, கல்வி, தொழில், சமூக முன்னேற்றத்தில் முன்னிலை யில் இருக்கும் தமிழ்நாடு திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்படுகிறது!

தமிழ்நாட்டின் மாணவர்களின் கனவுகளை உடைக்கிற கொடூர கருவியாக நீட் தேர்வை அது கையிலேந்தி இருக்கிறது. ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் என்ற போர்வையில், அது புதிய புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, திட்டமிட்டு இந்தி மொழியை திணிக்கிறது.

தமிழ் மொழி வளர்ச்சியை, அதன் யாவரும் கேளிர் எனும் பண்பாட்டை, அகழாய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அதன் தொன்மையை வேண்டுமென்றே கொடூர மதி கொண்டு நிராகரிக்கிறது.

உற்பத்தி மாநிலமான தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் ஜிஎஸ்டி வரியை, அதற்குரிய பங்கீட்டைக் கூட வழங்கா மல் மையத்துக்கு கொண்டு செல்கிறது. கல்விக்கான நிதி, இயற்கை பேரிடர்களுக்கான நிதி வழங்க மறுத்து சிக்கலை ஆழப்படுத்தி, பொருளாதார அநீதி இழைக்கிறது.

தனது கருத்தியல் முகவராக ஆளுநரை நியமித்து, சட்டங்களுக்கு அனுமதி மறுக்கிறது. தமிழ்நாட்டின் சட்டப்பேரவையை அதன் பணியைச் செய்யவிடாமல் தடுக்கிறது. ஆளுநர் மூலம் போட்டி அரசை நடத்துகிறது.

தன்னாட்சி அமைப்புகளான, மத்திய புலனாய்வுத் துறை, வருமான வரித்துறை அமலாக்கத்துறை ஆகியவற்றை, தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக ஏவி, தன்னுடைய விருப்பங்களை கொஞ்ச மும் கூச்சமின்றி நிறைவேற்றிக் கொள்ள அது தயங்குவதில்லை.

எதிர்க்கட்சிகளை மிரட்ட, மாநில அரசுகளை கட்டுப்படுத்த, அரசியல் ஆயுதமாக இந்த அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் மீனவர்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்து பரிதவிக்கும் போது, கொலை செய்தவர்களின் தோள் மீது கை போட்டு ஒன்றிய அரசு குலாவுகிறது.

விவசாயிகள் தொழிலாளர்கள் உழைக்கும் மக்களின் குரல் அதன் காதுகளில் விழுவதே இல்லை. கார்ப்பரேட் சக்திகளின் நலனுக்காக, மோடியின் குஜராத்தி நண்பர்களை உயரமாக்குவதற்காக சாமானியர்களைக் கசக்கிப் பிழிகிறது.

இது அரசியல் சாசனம் வரைந்து தந்துள்ள கூட்டாட்சியின் பாதை அல்ல. இது மைய ஆதிக்கத்தின் பாதை; மாநில உரிமையை ஒடுக்கும் பாதை; ஜனநாயகத்திற்கு எதிரான பாதை.

தொழிலாளர்களுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பெரும் இன்னல்களை இழைத்து வருகிறது. நான்கு தலைமுறைகளாக போராடி பெற்ற வேலை பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ஆகியவை முற்றாக பறிக்கப்படுகின்றன. இதற்கு ஏற்ற வகையில் தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டு நான்கு சட்டத் தொகுப்புகள் ஆக்கப்பட்டன.

தொழிலாளர் நலன் ஒத்திசைவு பட்டியலில் உள்ள நிலையில் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநில அரசுகள் இது வரை இந்த சட்டத் தொகுப்புகள் அனைத்திற்கும் விதிகள் உருவாக்கி அறிவிக்கைகள் வெளியிடவில்லை. தமிழ்நாடு அரசு வரைவு விதிகள் வெளியிட்டாலும், தொழிற் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தும் அறிவிக்கை வெளியிடாமல் நிறுத்தி வைத்து உள்ளது. அதோடு தொழிற்சங்கங்களின் கருத்தறிந்து அவர்களின் ஒப்புதல் இன்றி வெளியிட மாட்டோம் என்று தமிழ்நாடு அரசு உறுதி பட தெரிவித்தது.

இந்த நிலையில் 2025 நவம்பர் 21 ஆம் தேதியன்று ஒன்றிய அரசு நான்கு சட்டத் தொகுப்புகளும் நாடு முழுவதும் அமுலுக்கு வந்து விட்டது என்று அறிவிக்கைகள் வெளியிட்டு உள்ளது. டிசம்பர் 30 ஆம் தேதியன்று வரைவு விதிகளையும் வெளியிட்டு உள்ளது. விதிகளை இறுதி செய்து 2026 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அமுல்படுத்தப்பட்டதாக ஒன்றிய அரசு மூர்க்கத்தனமாக அறிவித்து உள்ளது.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை இந்தியா கூட்டணி கட்சிகள் முழுமையாக எதிர்த்து உள்ளன. நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழக அரசு பல நலத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறது. தொழிலாளர் நலன், தனியார் மயமாக்கல் போன்ற சில பிரச்சனைகள் 8 மணி நேர வேலை அதிகரிப்பு, தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்துதல், போக்குவரத்து தொழிலாளர், தூய்மைப் பணியாளர், திட்டப் பணியாளர்கள், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் என்று பல முனைகளில், தொழிலாளர்கள் கோரிக்கைகள் கேட்கப்பட்டுள்ளது.; சிலவற்றில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

ஆசிரியர் அரசுப் பணியாளர்களின் பழைய ஓய்வூதியம் எனும் கோரிக்கையை நிறைவேற்றுவது சம்பந்தமாக அந்த அமைப்புகளோடு பலசுற்று பேச்சுவார்த்தை நடத்தி; ஒன்றிய பாஜக அரசின் புதிய ஓய்வூதியம், ஒருங்கிணைந்த ஓய்வூதியத்தை விட பாதுகாப்பான தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்றப்படாமல் இருக்கிற கோரிக்கைகளை வரும் காலங்களில் வாதாடி பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கைக்கு உரிய அரசாக திமுக அரசும், நமது மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மட்டுமே களத்தில் உள்ளது என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

திராவிட இயக்கத்தின் ஒரு கிளையாக துவங்கிய அதிமுக, கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விடுபட்டு. முற்றிலுமாக தடம் புரண்டு விட்டது.

அதிமுக, பாஜகவுடன் கைகோர்த்துள்ள நிலையில், இது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல; மாறாக, மாநில உரிமைகளைத் தாரைவார்க்கும் முயற்சி என்பது தெளிவாகி விட்டது. அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில், சிக்கியுள்ள வழக்குகளில் இருந்து தண்டனை கிடைத்து விடாமல் தப்பிப்பதற்கான திசையில், தனது சொந்த மாநிலத்தையே காவு கொடுக்க துணிந்து விட்டது.

இன்றைய சூழலில், மக்களுக்கு நேர் எதிரான, அரசியல் சட்டத்தைக் கூட மதிக்காத, மாநில உரிமைகளை மறுத்து நாட்டில், சர்வாதிகாரத்தை நிலை நாட்டும் வேட்கையோடு, தமிழ்நாட்டை வேட்டையாட வருகிற பாசிச மதவெறி சக்திகளிடமிருந்து மாநிலத்தைப் பாதுகாப்பதே முன்னுரிமையாக உள்ளது.

மதவெறிக்கும், சர்வாதிகாரத்துக்கும் எதிரான ஒரு மாற்றுக் குரலை உறுதி செய்ய, ஜனநாயக சமநிலையை உருவாக்க, திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தமிழ்நாட்டின் மக்கள் வாக்களித்து பெருவெற்றி பெறச் செய்ய வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதிகளான அனைத்து தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளும், தொழிலாளர்களும் தமிழ் நாட்டின் வாக்காளர்கள் அனைவரிடமும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தமிழ்நாட்டின் மக்கள் வாக்களித்து பெருவெற்றி பெறச் செய்ய வேண்டிய அவசியத்தை விளக்கி விரிவான தேர்தல் பரப்புரை செய்யவும், களப்பணியாற்றிடவும் அனைத்து மாவட்டங்களின் தொழிற்சங்கத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம் என தொழிற்சங்கங்கள் விடுத்த இந்த அறிக்கையில் மு.சண்முகம் முன்னாள் எம்.பி., க.அ.ராஜாஸ்ரீதர், ம.இராதாகிருஷ்ணன், எஸ்.கண்ணன், டி.வி.சேவியர், சொ.இரணியப்பன், அ.சேக்கிழார், ஆர்.சம்பத், இரா.அந்திரிதாஸ், க.பேரறிவாளன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

மாதவரம் வடக்குப் பகுதி, 16 வது வட்டம், கன்னியம்மன் பேட்டை பகுதியில் மாதவரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களை ஆதரித்து பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையிலும் வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், மாவட்டப் பிரதிநிதி நா.மோகன்குமார், நாகூரார், கே.சிவசங்கரன் ஆகியோர் முன்னிலையிலும் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

விவசாய நிலம் இல்லாத எடப்பாடி விவசாயியா?

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேள்வி!

சிவகங்கை, ஏப். 9 –

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஐந்தாவது முறையாக போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர், அமைச்சர்கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக முதல்வர் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி இம்முறை 17வது சட்டமன்றத் தேர்தலை சந்திக்கிறது. வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி வாக்கு பதிவு நடைபெறுகிறது. கழகத் தலைவர் அவர்களால் கூட்டணி இறுதி செய்யப்பட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வேட்பு மனு தாக்கல் முடிவடைந்துள்ளது. தேர்தல் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நான்கு முறை போட்டியிட எனக்கு வாய்ப்பு அளித்த கழகத் தலைவர் தமிழக முதல்வர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தாவது முறையாக என்னை போட்டியிட வாய்ப்பு அளித்த கூட்டணி கட்சியின் தலைவர் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களுக்குமீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் இத்தொகுதியில் பெரும்பாலான பிரச்சினைகளை மக்களின் ஆதரவுடன் தீர்த்து வைத்துள்ளேன். அவர்கள் கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி தருவேன். தொடர்ந்து ஐந்தாவது முறையாக போட்டியிடும் நான் வெற்றி பெற்று மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி எடுப்பேன்.

நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மற்றும் கூட்டணி கட்சியினர் வாக்கு சேகரித்துள்ளார்கள். இதே போல் வருகிற 11ம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் கழகத் தலைவர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் நான்கு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார் .

நான்கு தொகுதிகளிலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் வாக்கு சேகரிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இந்த கொள்கை கூட்டணி தொடர்ந்து வெற்றியினை பெற்று வருகிறது . கழக தலைவர் விருப்பத்திற்கு ஏற்ப 200க்கும் மேற்பட்ட தொகுதியில் நிச்சயம் வெற்றி பெறும் என்பது உறுதியாக தெரிகிறது. களப்பணியில் நாங்கள் செல்லும் பொழுது மக்கள் தரும் வரவேற்பு ஆதரவு வைத்து இதை புரிந்து கொள்ள முடிகிறது .

எப்போதுமேதேர்தலில் தி.மு.க. தேர்தல் அறிக்கை கதாநாயகனாக திகழும். ஏற்கனவே கழக தலைவர் அவர்கள் 2021 தேர்தலில் அறிவித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்பொழுது 2026ல் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் மக்களை மிகவும் கவர்ந்துள்ளது. குறிப்பாக பெண்களுக்கான பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளது. அதேபோல் கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வி, சுகாதாரம் மற்றும் அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேற்றியுள்ளது .இதை மக்களிடம் எடுத்துக் கூறும்போது அவர்கள் தரும் வரவேற்பில் காண முடிகிறது .இந்தியாவிலேயே தமிழகத்தில் உயர் கல்விதரம் உயர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.11% அமைந்துள்ளது. எனவே முதல்வர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு உள்ளார் என்பது இதன் மூலம் தெரிகிறது. திட்டமிட்டு முதல்வர் அவர்கள் செயல்பட்டு

வருகிறார்.

மக்களின் தேவைகளை அறிந்து அந்த திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். எனவே தொடர்ந்து கழக ஆட்சி அமையவும் இந்த மக்கள் நலத் திட்டங்கள் தொடரவும் தமிழக முதல்வர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக பதவி ஏற்கவும் மக்கள் வாக்களிக்க தயாராக உள்ளார்கள். ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்கும். இது பிரகாசமாக உள்ளது. சாத்தான்குளம் தந்தை மகன் கொலை வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வரவேற்கத்தக்கது. அன்று எதிர்கட்சி தலைவராக இருந்த தளபதி அவர்கள் காவல்துறையில் நடைபெற்ற இந்தசம்பவத்தில் உரிய விசாரணை நடைபெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

அதை அப்பொழுது முதல்வராக இருந்த எடப்பாடி அவர்கள் மறுத்தார்கள். கழகம் பல்வேறு போராட்டங்களை நடத்தியதால் விசாரணை நடைபெற்றது . இன்று கழகத் தலைவர் கூறிய குற்றச்சாட்டுகள் உண்மை என்பது நீதிமன்ற தீர்ப்பின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் கழக தலைவர் தளபதி ஆட்சியின் முலம் குடும்பத்தில் ஒருவருக்காவது அரசின் பயன் கிடைத்துள்ளது.இதை தமிழகம் முழுவதும் மக்கள் நன்றியுடன் கூறுகிறார்கள். ஒன்றிய பா.ஜ.க அரசு பல்வேறு வகையில் நமக்கு துரோகம் செய்துவருகிறது . அதையெல்லாம் மீறி கழகத் தலைவர்அவர்கள் பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறார். அந்நிய தொழில் முதலீடு மூலம் ரூபாய் 12 கோடியே 50 லட்சம் முதலீடு ஈட்டப் பட்டுள்ளது. பல லட்சம் இளைஞர்களுக்கு தனியார் துறை மூலம் அரசுக்கு இணையான ஊதியம் பெரும் வகையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையால் ஒரு கோடியே 31 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளார்கள். தளபதி அவர்கள் இதை அறிவித்த போது எடப்பாடி அவர்கள் தளபதி அவர்களால் வழங்க முடியாது என்று கூறினார். ஆனால் தளபதி ஆட்சிக்கு வந்ததும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. தற்பொழுது எடப்பாடி இதற்கு போட்டியாக இந்த தொகையை உயர்த்தி அறிவித்துள்ளார். எடப்பாடி ஏலம் விடும் தலைவராக உள்ளார். அவரது பேச்சை மக்கள் நம்ப தயாராக இல்லை எடப்பாடி பழனிச்சாமி என்பவர் செல்லாத நோட்டாக தான் உள்ளார். ஆனால் தமிழக முதல்வர் தரும் வாக்குறுதிகளை தங்கத்திற்கு இணையாக மக்கள் மதிக்கிறார்கள். முதல்வர் செல்வாக்கு டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளது. முதல்வர் கூறும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையை மக்களிடம் பெற்றுள்ளார். அவரது தேர்தல் பிரச்சார பேச்சுக்கள் மக்களை மிகவும் ஈர்த்துள்ளது. அவர் செல்லும் இடங்களில மக்கள் அதிக அளவு ஆதரவு தருவதை பார்க்க முடிகிறது. எனவே இம்முறை கழக தலைவர் விருப்பம் போல் ஆட்சி அமைவது உறுதியாகிவிட்டது. திருப்பத்தூரில் நான் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. ஆனாலும் நாம் எதிரிகளை குறைத்து மதிப்பிட கூடாது. ஓய்வின்றி நமது தேர்தல் பணிகளை நாம் முழுமையாக செய்திட வேண்டும். எடப்பாடி தன்னை விவசாயி என்று கூறிக் கொள்கிறார். ஆனால் அவரது வேட்புமனு ஆவணத்தில் விவசாயிக்காக ஒரு சென்ட் நிலம் கூட இல்லை என்று அபிடவிட்டில் கூறியுள்ளார்.இவர் எவ்வாறு விவசாயி என்று கூறிக் கொள்ளுவார்.

இதுவரை தேர்தலில் போட்டியிட்டு பத்து முறை தோல்விஅடைந்த பழனிச்சாமி பதினோராம் முறையாக தோல் வி அடைவார் . இந்த சட்டமன்ற தேர்தலில் தோல்விஅடைவதன் மூலம் 11வது தோல்வி பழனிச்சாமி என்ற பெயரினை மக்கள் அவருக்கு தீர்ப்பாக வழங்க உள்ளார்கள்.

தொடர்ந்து கழக அரசு அமையவும் மக்கள் ஆதரவு தர வேண்டும். தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.நடிகர் விஜய் அரசியலுக்கு வந்த தால்இளைஞர்கள் வாக்கு தி.மு.கவிற்கு பிரியும் என்று கூறப்படுகிறது. அது உண்மையல்ல. கழகத்திற்கு உள்ள இளைஞர்கள் வாக்கில் சேதாரம் ஏற்படாது. கருரில் 41பேர் உயிர் இழந்த சம்பவத்தில் அவர் அவர்களது வீட்டிற்கு சென்று ஆறுதல் கூற வில்லை. அதுதான் பண்பாடு. ஆனால் அவர்களை சென்னைக்கு வரவழைத்து ஆறுதல் கூறினார். இது விசித்திரமான தாகும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் புலவர் கி.தியாகராசன்

ஏப்ரல் 9 (2000)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.

தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, 'குடியரசு' நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் "நம் நாடு" ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.

இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.